செ.வெ.எண்: 61 நாள்: 28.08.2019

## பத்திரிக்கைச் செய்தி

## குன்னூரில் தொழில் துவங்க விழிப்புணர்வு முகாம்

நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து கிராமங்கள் மற்றும் நகரப் பகுதிகளில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையிலும் தொழில் முனைவோர்களுக்கு உதவும் வகையிலும் மாவட்ட தொழில் மையம், உதகமண்டலம் UYEGP/ PMEGP / NEEDS ஆகிய மூன்று திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டங்களின்கீழ் உருளைகிழங்கு, வாழைக்காய் மற்றும் பலாப்பழ சிப்ஸ், கேரட் ஜூஸ், கேரட் ஹல்வா, இஞ்சி பூண்டு பேஸ்ட், இஞ்சி பூண்டு ஊறுகாய், மசாலா பவுடர், பருத்தி, சணல் மற்றும் காகித பைகள், உல்லன் ஆடை, அடுமனை பொருட்கள் , சாக்லேட் தயாரித்தல் மற்றும் பாக்குமட்டை தட்டுகள் தயாரித்தல், லேத் ஒர்க்ஸ், அழகு நிலையம், ஃபோட்டோ ஸ்டுடியோ, சீட்கவர், ஆயத்த ஆடைகள் தயாரிப்பு, ஜெராக்ஸ் சென்டர், சமையல் பாத்திரங்கள் வாடகை, இரு சக்கர வாகனங்கள் பழுது பார்த்தல், மளிகை கடை, கட்டிட மூல பொருட்கள் விற்பனை, நீலகிரி உற்பத்தி பொருட்கள் விற்பனை, எழுது பொருட்கள் விற்பனை உள்ளிட்ட பல தொழில்கள் துவங்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

இத்திட்டங்களின் மூலம் கடன் பெற்று தொழில் துவங்க விருப்பமுள்ளவர்கள்/திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து தெரிந்து கொள்ள விருப்பப்படுபவர்கள் வரும் **30.08.2019 வெள்ளிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் குன்னூர் பெட்போர்டு, இண்ட்கோசர்வ் தொழிற்கூட்டுறவு** அலுவலக கூட்ட அரங்கில் நடக்க உள்ள விழிப்புணர்வு முகாமில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் **திருமதி. ஜெ. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப.,** அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
நீலகிரி மாவட்டம்